மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்
வலங்கைமான்.

**முன்னிலை :– திரு. P. ஜேசுபாலன், M. A., B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்
வலங்கைமான்.

2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27–ம் நாள் திங்கட்கிழமை

**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 01/2025**

**குற்ற எண். 291/2024**

**CNR No. TNTV09-000064-2025**

அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
வலங்கைமான் காவல் நிலையம்,
திருவாரூர் மாவட்டம் ....குற்றமுறையீட்டாளர்.

// எதிர்//

**A.1 விக்னேஷ், வயது 25/2026**
த/பெ. ரவி,
கீழத் தெரு, கோவிந்தகுடி,
வலங்கைமான் தாலுக்கா .

**A.2 ரவி, வயது 56/2026**
த/பெ. கோவிந்தசாமி,
கீழத் தெரு, கோவிந்தகுடி,
வலங்கைமான் தாலுக்கா ....எதிரிகள்

**2019 ம் ஆண்டு குற்றவியல் நடைமுறை விதிகள், விதி 106 ன் கீழ் படியான விபரங்கள்**

| Sl. No. | Name of the Complaint | Name of the accused | Date of Arrest | Date of Release |
|---|---|---|---|---|
| (i) | State Rep. By The Inspector of Police, Valangaiman., | **A1. Vignesh, S/o. Ravi**<br><br>**A2. Ravi, S/o. Govinthasamy** | A.B.<br><br>19.06.2024 | A.B.<br><br>27.06.2024 |

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:30:33 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | Date of filling of the complainant/ final report in the court | **Filing of Complainant** | **Taken on file** | |
| | | 19.06.2024 | 14.02.2025 | |
| (iii) | Date of committal of the cases to the court of sessions | : | Nil | |
| (iv) | Date of questioning of the accused U/s. 228, 240, 246 and 251 as the case may be | : | 13.04.2025 | |
| (v) | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior courts except routine petitions like petitions U/s. 317 of the code. | **Crl.M.P.No.** | **Date of filing** | **Result** |
| | **Nil** | **Nil** | **Nil** | **Nil** |
| (vi) | Date of Examination in Chief and Cross | **Name of the Examination** | **Date of Chief** | **Date of Cross** |
| | P.W.1 | Raja@ Rajkanna | 26.06.2025 | 26.06.2025 |
| | P.W.2 | Ramesh | 18.08.2025 | 18.08.2025 |
| | P.W.3 | Jamuna | 18.08.2025 | 18.08.2025 |
| | P.W.4 | Anusiya | 22.09.2025 | 22.09.2025 |
| | P.W.5 | Saravanan | 22.09.2025 | ... |
| | P.W.6 | Manobalan | 30.10.2025 | …. |
| | P.W.7 | Amutharani | 05.02.2026 | 05.02.2026 |
| (vii) | Date of examination of the accused U/s. 313 of the Code | | | 16.02.2026 |
| (viii) | Details of abscondance of an accused and his appearance/Production as the case may be: | | | Nil |
| (ix) | Grant of stay by superior courts and the results thereof | Sessions Court CMP No. | High Court No. and Date of stay | Result |
| | Nil | Nil | Nil | Nil |

| | |
|---|---|
| முதலாவதாக | U/s. 294 (b)ன்படி, கடந்த 16.06.2024 ம் தேதி |

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:30:40 +0530

| | | |
|---|---|---|
| | | அன்று மாலை 18.00 மணியளவில் மழை பெய்ததால் புகார்தாரர் வைக்கோல் போரை தார் பாய் கொண்டு முடிய போது அங்கு வந்த 1 மற்றும் 2 எதிரிகள் புகார்தாரரை குச்சிகாரி மகனே என்று காமகுரோதமாக திட்டிய குற்றம். |
| இரண்டாவதாக | | U/s.324 ன்படி, மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக, 1 வது எதிரி புகார்தாரரை கல்லால் தாக்கியும் 2 வது எதிரி தேங்காய் உரிக்கும் பாறையால் புகார்தாரரை தாக்கி புகார்தாரருக்கு சாதாரண சொற்ப காயத்தை ஏற்படுத்திய குற்றம் |
| மூன்றாவதாக | | U/s. 506(II)ன்படி, மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக 1 மற்றும் 2 எதிரிகள் இருவரும் சேர்ந்து புகார்தாரரை பார்த்து எங்களிடம் வைத்துக்கொண்டால் உன்னை குடும்பத்தோடு காலி செய்துவிடுவோம் என்று மிரட்டிய குற்றம் |
| எதிரிகளின் பதில் | | குற்றவாளி இல்லை |
| நீதிபதியின் தீர்மானம் | | எதிரிகளின் மீதான 294(b), 324, 506(ii) இதச பிரிவுகளின் மீதான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்படவில்லை |
| தண்டனை அல்லது உத்தரவு | | 1 மற்றும் 2 எதிரிகளின் மீதான இதச பிரிவு 294(பி) கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்தும், 1மற்றும் 2 எதிரியை இதச பிரிவு 294(பி) ன்கீழ் உள்ள குற்றச்சாட்டிற்கு, குவிமுச பிரிவு 248(1) ன் கீழ் விடுதலை செய்தும், மேலும், 1 மற்றும் 2 எதிரிகளின் மீதான இதச பிரிவு 324 ன் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்தும், 1மற்றும் 2 எதிரியை இதச பிரிவு 506(ii)ன் கீழ் உள்ள குற்றச்சாட்டிற்கு, குற்றவாளி இல்லை என்று தீர்மானித்தும் எதிரிகளை குவிமுச பிரிவு |

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:30:47 +0530

| | |
|---|---|
| | 248(1)–ன் கீழ் விடுதலை செய்தும், தீர்ப்பளிக்கப்படுக்கப்படுகிறது. |

இவ்வழக்கானது 18.04.2026 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு குற்றவியல் உதவி வழக்கறிஞர் நிலை–1 திரு. இளஞ்செழியன், அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு. M. முரளி மற்றும் திரு. P. திருநாவுக்கரசு ஆகியோர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களையும் கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் கவனமான பரிசீலனையில் இருந்து வந்ததுமான இவ்வழக்கில் இன்று (27.04.2026) இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

## தீர்ப்புரை

1. **அரசுத்தரப்பு வழக்கு:**

அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றயிறுதி அறிக்கையில் இருந்து தெரியவரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு, வலங்கைமான் காவல் சரகம் கோவிந்தகுடி கீழத்தெருவில் வசித்து வரும் இவ்வழக்கின் புகார்தாரர் ராஜா கண்ணா (எ) ராஜா என்பவருக்கும் அவரது பக்கத்து வீட்டில் வசித்து வரும் எதிரி ரவி குடும்பத்திற்கும் மாட்டுக்கொட்டைகை மற்றும் வைக்கோல் போர் போடு இடம் சம்மந்தமாக இட பிரச்சனை இருந்து வந்த நிலையில் 16.06.2024 ம் தேதி மாலை 18.00 மணியளவில் மழை பெய்ததால் புகார்தாரர் வைக்கோல் போரை தார் பாய் கொண்டு மூடிய போது அங்கு வந்த 1 வது எதிரி மற்றும் 2 வது எதிரி இருவரும் குச்சிகாரி மகனே என்று திட்டி 1 வது எதிரி கல்லால் தாக்கியும்,

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:30:53 +0530

2 வது எதிரி தேங்காய் உரிக்கும் பாறையால் தாக்கியும், புகார்தாரருக்கு இடது உள்ளங்கை மற்றும் இடது கை ஆகியவற்றில் சாதாரண சொற்ப காயத்தை ஏற்படுத்தியும் புகார்தாரரை பார்த்து 1 மற்றும் 2 எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்து குற்றசெயல் புரிந்துள்ளார்கள். எனவே எதிரிகளின் செய்கையானது சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(2) இதச–ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட விவரம்:</u>**

குவிமுச பிரிவு 173(2)ன் கீழ் இவ்வழக்கின் குற்றயிறுதி அறிக்கை வலங்கைமான் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளரால் கடந்த 19.06.2024–ம் தேதியன்று இந்திய தண்டனைச்சட்டம் 1860 பிரிவுகள் 294(b), 324, , 506(2)–ன் கீழ்இவ்வழக்கின் 1 மற்றும் 2 எதிரிகள் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி குற்றயிறுதி அறிக்கையானது கடந்த 14.02.2025 ம் தேதி இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு குவிமுச பிரிவு 204–ன் கீழ் 1 மற்றும் 2 எதிரிகளுக்கு அழைப்பானை அனுப்பட்டது.

**3. <u>1 முதல் 2 எதிரிகளுக்கு குவிமுச பிரிவு 207ன் கீழ் நகல் வழங்கப்பட்டத்தின் விவரம் :</u>**

1 மற்றும் 2 எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலை ஆனவுடன் அரசுத்தரப்பு ஆவணங்களின் நகல்கள் அவருக்கு குவிமுச பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

**4. <u>1 முதல் 2 எதிரிகள் மீது வனைப்பட்ட குற்றச்சாட்டுகளின் விவரம்:</u>**

**4. 1.** 1 மற்றும் 2 எதிரிகளுக்கு போதுமான கால அவகாசம் கொடுக்கப்பட்டு, இருதரப்பு வாதங்களையும் கேட்டு, வழக்காவணங்களை பரிசீலனை

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:30:58 +0530

செய்து, இந்நீதிமன்றத்தால் 1 முதல் 2 எதிரிகள் மீது குவிமுச பிரிவு 240(1)–ன் படி 1 முதல் 2 எதிரிகள் மீது இந்திய தண்டனைச்சட்டம் 1860 பிரிவுகள் 294(b), 324, 506(2)–ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டது.

**4.2.** மேற்படி குற்றச்சாட்டுகளை 1 முதல் 2 எதிரிகளிடம் விளக்கி வினவியபோது 1 முதல் 2 எதிரிகள் அவர்கள் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்துரைத்தனர். எனவே அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு அவர்களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

**5. <u>அரசுத்தரப்பு சாட்சியம்:</u>**

அரசுதரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. சான்றுப்பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**6. <u>அரசுத்தரப்பு சாட்சியங்களின் மூலம் தெரியவரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>**

**6.1. அசா.1 ராஜா(எ) ராஜகண்ணா** தனது சாட்சியத்தில் கடந்த 18.06.2024 ம் தேதி மழை பெய்து கொண்டிருந்தபோது மாலை 5, 5.30 மணியளவில் தங்களுக்கு சொந்தமான வைக்கோல் போரை படுதாவினால் மூடச் சென்ற போது விக்னேஷ்க்கும் தனக்கும் வாய்தகராறு ஏற்பட்டது. என்றும், அப்போது தன்னை குச்சிகாரி மகனே என்ற வார்த்தைகளால் திட்டினார் என்றும், அதன்பிறகு விக்னேஷ் தேங்காய் உரிக்கும் பாறையால் தன்னை தாக்கினார் என்றும், அதை தடுத்தபோது தனது இடது கையில் கிழிந்த காயம் ஏற்பட்டது என்றும், அதன்பின்னர் தான்

JESU BALAN
Digitally signed by JESU BALAN
Date: 2026.04.27 16:31:06 +0530

கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றதாகவும், அங்கு தனக்கு இடது உள்ளங்கை பகுதியில் தையல் போட்டார்கள் மேலும் அதே இடது கை மோதிர விரலில் ஆப்ரேசன் செய்வதற்காக மோடி காப்பீடு திட்டத்தின் கார்டு தன்னிடம் இல்லை என்பதால் தான் மருத்துவமனையிலிருந்து தன்னிச்சையாக சிகிச்சையிலிருந்து மோடி காப்பீடு திட்டத்தில் பதிவு செய்வதற்காக திருவாரூர் சென்றுவிட்டதாகவும், தான் மேற்படி மருத்துவமனையில் 4 நாட்களாக உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்ததாகவும், தான் சிகிச்சையிலிருந்தபோது போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல என்று சாட்சியம் அளித்துள்ளார். அரசு தரப்பு வழக்கை அனுசரிக்காத காரணத்தால் அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

**6.2. அ.சா.2 ரமேஷ்** தனது சாட்சியத்தில், தனது சாட்சியத்தில் கடந்த 18.06.2024ம் தேதி மாலை 05.00–06.30 மணியளவில் மழைப் பெய்து கொண்டிருந்தது, அதனால் தங்கள் வீட்டுக் கொல்லைப்புரம் உள்ள வைக்கோல் போருக்கு தானும் தனது மகனும் படுதா போட்டு மூடினோம் என்றும், அப்போது ஆஜர் 1வது எதிரி மது போதையில் குச்சிகாரி மகனே தேவுடியா மகனே என்றுத தங்களை திட்டியதாகவும், தான் வைக்கோல் போரின் மேல் நின்று படுதா போட்டுக்கொண்டிருந்ததாகவும், அப்போது 1 வது எதிரி விக்னேஷ் கல்லால் தன்னை அடித்ததாகவும், தான் வைக்கோல் போர் மேலிருந்து கீழே இறங்கிவிட்டதாகவும், தனது மகன் அ.சா.1 யாரை பேசுகிறீர்கள் என்று கேட்டதாகவும், அப்போது ஆஜர் 1வது

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:31:12 +0530

எதிரி தெருபக்கம் சென்ற தனது மகனை பாரையால் குத்த வந்தபோது தனது மகன் கையால் தடுத்துள்ளார் என்றும், அதில் அவருக்கு வலது கையில் காயம் ஏற்பட்டதாகவும், தான் உடனே 100க்கு போன் செய்ததாகவும், அரைமணி நேரம் கழித்து போலீசார் வந்தார்கள் என்றும், அப்போது நன்றாக மழை பெய்தது. 2 வது எதிரி ரவி ஒரு பத்து நபர்களுடன் வந்து வீட்டில் உட்கார்ந்திருந்த தங்களை ஜாதி பெயர் சொல்லி திட்டி அடித்ததாகவும், அதில் தங்கள் வீட்டு பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு காயம் ஏற்பட்டது என்றும், சம்பவ இடத்திற்கு மீண்டும் நான்கைந்து போலீசார் வரவும் எதிரிகள் சம்பவயிடத்தை விட்டு சென்று விட்டதாகவும், காயம் பட்ட தனது மகனை கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்ததாகவும், எதிரிகள் கர்ப்பமாக இருந்த தனது மருமகள் அனுசுயாவையும் தாக்கினார்கள் என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். எதிரிகள் தரப்பிலும் குறுக்கு விசாரனை செய்யப்பட்டார்.

**6.3. அ.சா.3 ஜமுனா** தனது சாட்சியத்தில் கடந்த 18.06.2024ம் தேதி மாலை 05.00 மணிக்கு மேல் தனது கணவரும் தனது மகனும் மழை வருவது போல இருந்ததால் தங்கள் வீட்டு பின்புறம் உள்ள வைக்கோல் போரை படுதா போட்டு மூடுவதற்காக சென்றதாகவும், பின்னர் வைக்கோல் போரை படுதா போட்டு மூடும் போது ஆஜர் 1வது எதிரி விக்னேஷ் தனது கணவரையும் மகனையும் தகாத வார்த்தைகளால் பேசி கல்லால் அடித்துள்ளதாகவும், ஆஜர் 1வது எதிரி பாறையை எடுத்துக்கொண்டு வந்து தனது மகனை குத்தவந்ததாகவும், அதை தடுத்த எனது மகனுக்கு

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:31:19 +0530

அவரது இடது கையில் காயம் ஏற்பட்டதாகவும், சண்டைக் குறித்து போலீஸ் எண் 100 க்கு தகவல் கொடுத்ததாகவும், தகவலை பெற்று போலீசார் ஒருவர் சம்பவயிடத்திற்கு வந்ததாகவும், ஆஜர் எதிரிகள் 20 நபர்களை அழைத்துக்கொண்டு கூட்டமாக வந்து போலீசார் எப்படி வந்து தங்கள் வீட்டை பார்க்கலாம் என்று சொல்லி மீண்டும் தங்களிடம் ஆஜர் எதிரிகள் பிரச்சனை செய்தார்கள் என்றும், தானும் தனது மகள்கள் மற்றும் தனது மருமகள் அனுசுயா எல்லோரும் இருந்தோம் என்றும், ஆஜர் எதிரியுடன் வந்தவர்கள் கர்ப்பமாக இருந்த தனது மருமகள் அனுசுயாவையும் தாக்கி விட்டதாகவும், அப்போது தங்கள் தெருவில் மின்விளக்கு எரியாததால் யார் அடித்தார்கள் என்று தெரியவில்லை என்றும், மயக்கமடைந்த தனது மருமகள் அனுசுயாவையும் காயம் பட்ட தனது மகனையும் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம் என்றும், தாங்கள் மருத்துவமனைக்கு சென்ற பின்பு சம்பவ இடத்திற்கு நிறைய போலீசார் வந்துள்ளார்கள் என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும், எதிரிகள் தரப்பிலும் குறுக்கு விசாரனை செய்யப்பட்டார்.

**6.4. அ.சா.4 அனுசியா,** தனது சாட்சியத்தில், அ.சா.1 தனது கணவர் ஆவார் எனவும், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், அவர்கள் தனது பக்கத்து வீட்டுக்காரர்கள் என்றும், ஆஜர் எதிரிகள் தங்களின் இடத்தில் தங்கள் வீட்டிற்கு மேல்புறமாக அவர்கள் வீட்டின் சுவர் வைத்துள்ளனர் என்றும், இது தொடர்பாக தங்கள் இரு குடும்பத்திற்குள் பிரச்சனை இருந்து வந்ததாகவும், இந்நிலையில் கடந்த 18.06.2024 ம் தேதி மாலை 5 லிருந்து 6 மணிக்குள் மழை வருவது போல் இருந்ததாகவும், அதனால்

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:31:26 +0530

கொல்லை புறம் உள்ள வைக்கோல் போரை மூடுவதற்காக தனது கணவரும் தனது மாமனார் ரமேஷ் அவர்களும் கொல்லைபுறம் சென்றனர் என்றும், அப்போது ஆஜர் 1வது எதிரி கெட்ட வார்த்தை சொல்லி திட்டியும் ஜாதி பெயரை சொல்லியும் திட்டியதாகவும், முதலில் அவர் யாரை திட்டுகிறார் என்று தெரியவில்லை என்றும், ஜாதி பெயர் சொல்லி திட்டியதும்தான் தங்களை திட்டுவது தெரிந்தது என்றும், ஏன் திட்டினாய் என்று தனது கணவரும் தனது மாமனாரும் கேட்டபோது 1 வது எதிரி விக்னேஷ் கல்லால் தனது கணவரையும் மாமனாரையும் அடித்ததாகவும், தங்கள் இரு வீட்டிற்கும் இடையில் கம்பிவேலி உள்ளதாகவும், தனது மாமனாரும் கணவரும் கொல்லைபுறத்திலிருந்து தெருபக்கம் வந்ததாகவும், ஆஜர் எதிரிகள் இருவரும் அவர்கள் வீட்டு சந்திலிருந்து தெருபக்கம் வந்தார்கள் என்றும், வரும்போதே ஆஜர் 1 வது எதிரி விக்னேஷ் தேங்காய் உரிக்கும் பாரையை எடுத்து வந்து தனது கணவரை தலையில் குத்த வந்ததாகவும், அதை தனது கணவர் தடுத்ததில் தனது கணவருக்கு இடது உள்ளங்கையில் பாரை குத்தி காயம் ஏற்பட்டதாகவும், இரத்தம் கையிலிருந்து வழிந்துகொண்டிருந்த நிலையிலும் ஆஜர் 1 வது எதிரி விக்னேஷ் தனது கணவரை அடித்ததாகவும், தனது நாத்தனார் சம்பவம் குறித்து 100 க்கு போன் செய்ததாகவும், சற்று நேரம் கழித்து போலீசார் அங்கு வந்தார்கள் என்றும், விபரத்தை சொன்னதாகவும், எதிரிகள் இருவரும் எதிர்புறம் வீட்டில் இருந்தார்கள் என்றும், போலீசார் இருக்கும் போது ஆஜர் எதிரிகள் இருவரும் சுமார் 20 நபர்களை அழைத்து வந்து போலீஸிடம் எப்படி சொல்லலாம் என்று அடித்தார்கள் என்றும், அப்போது எதிரிகளுடன் வந்த நபர்களும் அடித்ததாகவும், ஆஜர் எதிரிகள்

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:31:32 +0530

அழைத்து வந்த நபர்கள் தன்னையும், தனது கணவர், தனது மாமனார், மாமியார் ஆகியோர்களையும் அடித்ததாகவும், சம்பவத்தின்போது தான் கருவுற்று இருந்ததாகவும், ஆம்புலன்ஸிற்கு போன் செய்தோம் என்றும், ஆம்புலன்ஸ் வர தாமதாமானதால் காயம்பட்ட தாங்கள் நால்வரும் ஆட்டோவில் கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு சென்றதாகவும், மேற்படி மருத்துவமனையில் தானும் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்ததாகவும், சிகிச்சையில் இருந்த போது அன்றைய தினம் இரவு 12 மணியளவில் வலங்கைமான் போலீசார் தங்களை விசாரணை செய்தார்கள் என்றும், தானும் புகார் வாக்குமூலம் கொடுத்ததாகவும், எனது கணவரும் புகார் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், எனது கணவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்தனர் என்றும், சம்பவ சமயத்தில் எதிரிகளுடன் வந்த நபர்கள் தன்னை கீழே தள்ளியதாகவும், அப்போது தான் 3 மாத கர்ப்பமாக இருந்ததால் தனது கருவிற்கு ஏதும் பாதிப்பு ஏற்படுமோ என்று தனக்கு பயமாக இருந்ததாகவும், அதனால் தான் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்கு சேர்ந்ததாகவும், போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். எதிரிகள் தரப்பிலும் குறுக்கு விசாரனை செய்யப்பட்டார்கள்.

**6.5. அ.சா.5 சரவணன்** தனது சாட்சியத்தில், தான் மேற்படி முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருவதாகவும், அ.சா.1 , அ.சா.2, அ.சா.4 ஐ தெரியும் என்றும், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், அவர்களுக்குள் என்ன பிரச்சனை என்று தனக்கு தெரியாது என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் தான் கையொப்பம் எதுவும் செய்யவில்லை

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:31:40 +0530

என்றும், இன்றிலிருந்து சுமார் 1 மாதத்திற்கு முன்பு தங்கள் தெருவில் சத்தமாக இருந்தது என்றும், தான் வந்து பார்த்தபோது அ.சா.4 ஐ ஆட்டோவில் ஏற்றினார்கள் என்றும், போலீசார் தன்னை வந்து எப்போது வந்தேன் என்று கேட்டார்கள் என்றும், தன்னிடம் கையொப்பம் எதுவும் வாங்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். அரசு தரப்பு வழக்கை அனுசரிக்காத காரணத்தால் அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

**6.6. அ.சா.6 மனோபாலன்** தனது சாட்சியத்தில் ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், தனது ஊர்க்காரர்கள் என்றும், அ.சா.1 ஐ தெரியும் என்றும், அ.சா.1 க்கும் ஆஜர் எதிரிகளுக்கும் இடையில் என்ன பிரச்சனை என்று தனக்கு தெரியாது என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் தான் கையொப்பம் எதுவும் செய்யவில்லை என்றும், இவ்வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். அரசு தரப்பு வழக்கை அனுசரிக்காத காரணத்தால் அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

**6.7. அ.சா. 7 அமுதாராணி** தனது சாட்சியத்தில், தனது சாட்சியத்தில் கடந்த 18.06.2024 ம் தேதி இரவு 10.00 மணியளவில் கும்பகோணம் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப்பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த ராஜ்கண்ணா என்ற ராஜா என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து அதன் தன்மைக்கேற்ப வலங்கைமான் காவல் நிலைய குற்ற எண் 291/2024 ச/பி. 294(b), 324, 506(ii) IPC ன் கீழ் 19.06.2024, 12.00 மணிக்கு வழக்கு

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:31:47 +0530

பதிவு செய்ததாகவும், புகார் வாக்குமூலம் **அ.த.சா.ஆ. 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ. 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், பின்னர் அன்றைய தினமே 11.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் சரவணன் மற்றும் மனோபாலன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்ததாகவும், பார்வை மகசர் மற்றும் வரைபடம் முறையோ **அ.த.சா.ஆ.3 மற்றும் அ.த.சா.ஆ.4 ஆக** குறியீடு செய்யப்படுகிறது என்றும், பின்னர் இவ்வழக்கின் சாட்சிகள் ராஜாகண்ணு, ரமேஷ், ஜமுனா, அனுசுயா, பார்வை மகசர் சாட்சிகள் சரவணன் மற்றும் மனோபாலன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.1–க்கு சிகிச்சையளித்த கும்பகோணம் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.முத்துகுமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், காயம்பட்ட ராஜாகண்ணு மற்றும் அனுசுயா என்பவர்களுக்கு மருத்துவர் வழங்கிய விபத்து பதிவேடு நகல் **அ.த.சா.ஆ.5 ஆக** குறியீடு செய்யப்படுகிறது என்றும், ராஜாகண்ணு என்பவர் தன்னிச்சையாக மருத்துவ சிகிச்சையில் இருந்து விடுவித்துக்கொண்டதால் மருத்துவர் காயத்தின் தன்மை குறித்து சான்று வழங்கவில்லை எனவும், இவ்வழக்கின் எதிரி ரவி த/பெ. கோவிந்தசாமி, கீழத் தெரு, கோவிந்தகுடியில் 19.06.2024 மதியம் 15.00 மணியளவில் ஆவூர் பஸ் ஸ்டாப் அருகில் நின்றுகொண்டிருந்தவரை குற்ற காரணம் கூறி கைது செய்து உரிய நடைமுறைகளுக்கு பின்னர் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், இவ்வழக்கின் மற்றொரு எதிரி விக்னேஷ் என்பவர் நீதிமன்ற முன்பிணையில் சென்றுவிட்டதால்

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:31:55 +0530

இவ்வழக்கில் அவரை கைது செய்யவில்லை என்றும், இத்துடன் தன்னுடைய புலன் விசாரணையை முடித்து சாட்சிகளின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் எதிரிகளின் மீது ச/பி. 294(b), 324, 506(ii) IPC வின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும், தன்னுடைய விசாரணையில் அனைத்து சாட்சிகளும் வழக்கு சம்பவத்தை பற்றி கூறியுள்ளனர் என்று சாட்சியம் அளித்துள்ளார். எதிரிகள் தரப்பிலும் குறுக்கு விசாரனை செய்யப்பட்டார்.

7. <u>குவிமுச பிரிவு 313(1) (b) ன் படியான விசாரணை:</u>

இவ்வழக்கில் அரசுத்தரப்பால் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து 1 முதல் 2 எதிரிகளுக்கு பாதகமாக உள்ள சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகள் குறித்து குவிமுச பிரிவு 313(1) (b)ன் கீழ் 1 முதல் 2 எதிரிகளிடம் வினவிய போது 1 முதல் 2 எதிரிகள் மேற்படி சாட்சிகளின் சாட்சியம் பொய் என்று மறுத்துரைத்தனர். மேலும், 1 முதல் 2 எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் எதுவும் இல்லை என்று தெரிவித்தனர்.

8. <u>1 முதல் 2 எதிரிகள் தரப்பு வழக்கு:</u>

1 முதல் 2 எதிரிகள் மீது பொய்யாக வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது என்றும் எதிரி தான் குற்றத்தை செய்தார் என்று நிருப்பிக்க சாட்சியம் எதுவும் இல்லை என்பது எதிரி தரப்பு வாதமாகும். எதிரி தரப்பில் சாட்சிகள் எதுவும் விசாரிக்கப்படவில்லை ஆவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:32:02 +0530

**9. தீர்வுக்குரிய பிரச்சினை:**

1 முதல் 2 எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டினை அரசுத்தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருப்பித்துள்ளதா? அவ்வாறு குற்றம் நிருப்பிக்கப்பட்டிருப்பின் 1 முதல் 2 எதிரிகளுக்கு கிடைக்கக்கூடிய தண்டனையின் விபரம் என்ன? என்பதே இவ்வழக்கின் தீர்வுகுரிய பிரச்சினையாகும்.

**10. தீர்வு:**

**10.1.** இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அரசுத்தரப்பில் **அ.சா.1** முதல் **அ.சா.7** வரையிலான சாட்சிகளின் சாட்சியம் மற்றும் **அ.சா.ஆ.1** முதல் **அ.சா.ஆ.5** வரையிலான சான்றாவணங்களின் மூலம் அரசுத்தரப்பு வழக்கு சந்தேகத்திற்கு இடமின்றி நிருப்பிக்கப்பட்டுள்ளதாகவும், ஆகையால் 1 மற்றும் 2 எதிரிகளை குற்றவாளிகள் என தீர்மானித்து தக்க தண்டனை வழங்குமாறு வாதிடப்பட்டது.

**10.2**. 1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் அரசுத்தரப்பு வழக்கு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருப்பிக்கப்படவில்லை என்றும், இவ்வழக்கின் புகார்தாரர் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல என்றும் 1 மற்றும் 2 எதிரிகளை குற்றச்சம்பவத்தோடு தொடர்பு படுத்தும் விதத்தில் எவ்வித சாட்சியமும் இல்லை என்றும், இவ்வழக்கின் 2 வது எதிரிக்கு எதிராக எவ்வித சாட்சியமும் நீதிமன்றத்தில் அளிக்கப்படவில்லை என்றும், எனவே, 1 மற்றும் 2 எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:32:10 +0530

தீர்மானித்து இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பு வழங்குமாறு வாதிடப்பட்டது.

**10.3.** 1872ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 101ன் கீழ் எதிரி மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டினை மெய்ப்பிக்கும் சுமை அரசுத்தரப்பைச் சார்ந்தது. அரசுத்தரப்பால் மேற்படி எதிரி மீதான குற்றச்சாட்டினை மெய்ப்பிக்கும் பொருட்டு **அ.சா.1** முதல் **அ.சா.7** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு **அ.சா.ஆ.1** முதல் **அ.சா.ஆ.5** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அரசுத்தரப்பு வழக்கு யாதெனில், வலங்கைமான் காவல் சரகம் கோவிந்தகுடி கீழத்தெருவில் வசித்து வரும் இவ்வழக்கின் புகார்தாரர் ராஜா கண்ணா (எ) ராஜா என்பவருக்கும் அவரது பக்கத்து வீட்டில் வசித்து வரும் எதிரி ரவி குடும்பத்திற்கும் மாட்டுக்கொட்டைகை மற்றும் வைக்கோல் போர் போடு இடம் சம்மந்தமாக இட பிரச்சனை இருந்து வந்த நிலையில் 16.06.2024ம் தேதி மாலை 18.00 மணியளவில் மழை பெய்ததால் புகார்தாரர் வைக்கோல் போரை தார் பாய் கொண்டு மூடிய போது அங்கு வந்த 1 வது எதிரி மற்றும் 2 வது எதிரி இருவரும் குச்சிகாரி மகனே என்று திட்டி 1 வது எதிரி கல்லால் தாக்கியும், 2 வது எதிரி தேங்காய் உரிக்கும் பாறையால் தாக்கியும், புகார்தாரருக்கு இடது உள்ளங்கை மற்றும் இடது கை ஆகியவற்றில் சாதாரண சொற்ப காயத்தை ஏற்படுத்தியும் புகார்தாரரை பார்த்து 1 மற்றும் 2 எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்து குற்றசெயல் புரிந்துள்ளதாக சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(2) இதச–ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:32:18 +0530

**10.4**. இவ்வழக்கில் உரிய நேரத்தில் புகார் வாக்குமூலம் பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதா என்று காண்கையில், இவ்வழக்கின் சம்பவ நாள் 18.06.2024 ம் தேதி மாலை 5, 05.30 மணிக்கு சம்பவம் நடந்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. வழக்கின் முதல் தகவல் அறிக்கை 1 நாள் காலதாமதமாக 19.06.2024 ம் தேதி 12.00 மணிக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. 1 மற்றும் 2 எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளது அரசு தரப்பு வழக்கின் மீது சந்தேகத்தை ஏற்படுத்துவதாக வாதிட்டார். முதல் தகவல் அறிக்கை காலம் 8 ஐ பரிசீலிக்கையில் குற்றமுறையீட்டாளரால்/தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம், நிலைய மனு எண் 291/2024 விசாரணை செய்து விசாரணைக்கு பின் வழக்கு பதிவு செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட சங்கதிகளை பரிசீலனை செய்ததில் குற்றம் நடைபெற்ற நாளிற்கும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாளிற்கும் 1 நாட்கள் காலதாமதம் உள்ளது தெரிய வருகிறது.

**10.05**. **முதலாவதாக,** இந்த வழக்கில் அரசு தரப்பில் எதிரிகள் மீதான 294(b) குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்பட இதச பிரிவு 294(b)–ன் வரையறைகளை இத்தீர்ப்பில் சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

(i) **294 - "Whoever, to the annoyance of others, -**

(b) sings. recites or utters any obscene songs, ballad or words, in or near any public place,

shall be punished with imprisonment of either description for a term which may extend to three months, or with fine, or with both.

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:32:25 +0530

கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர், அ..சா.1 ராஜா(எ)ராஜ்கண்ணா தான் அளித்துள்ள சாட்சியத்தில் தனக்கும் ஆஜர் 1 வது எதிரிக்கும் வாய்தகராறு" ஏற்பட்டு அப்போது ஆஜர் 1 வது எதிரி அ.சா.1 ஐ பார்த்து குச்சிகாரி மகனே என்று காமகுரோதமாக திட்டியதாகவும் அதனை ஒத்துரைத்து அ.சா.2, அ.சா.3, அ.சா.4 நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்திருப்பதாகவும், ஆகையால் இதச பிரிவு 294(பி)ன் கீழான குற்றச்சாட்டு நிரூபிக்கும் வண்ணமாக அரசுத்தரப்பில் சாட்சியம் வழங்கப்பட்டுள்ளது என தன் வாதத்தை முன் வைத்தார்.

**10.06.** கற்றறிந்த எதிர் தரப்பு வழக்கறிஞர் தன் வாதத்தின்போது புகார் வாக்குமூலத்தில் கூறி உள்ள ஆபாச வார்த்தைகளை அ..சா.1 ராஜா (எ)ராஜ்கண்ணா நீதிமன்ற சாட்சியத்தில் சுட்டிக்காட்டி சாட்சியம் அளித்திருந்த போதும் மேற்படி ஆபாச வார்த்தைகளை பொது இடத்திலோ, அல்லது அதை சுற்றியுள்ள இடத்திலோ எதிரியால் உச்சரிக்கப்பட்டதாகவோ மேற்படி ஆபாச வார்த்தைகளால் அ.சா.1 ராஜா (எ)ராஜ்கண்ணா பிற சாட்சிகளுக்கும் அல்லது மற்றவர்களுக்கும் அருவறுப்பு ஏற்பட்டதாகவோ சாட்சியம் அளிக்காத நிலையில் எதிரிகளுக்கு எதிராக 294(பி) இதச பிரிவின் கீழான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதாக கருத முடியாது என்று தன் வாதத்தை முன் வைத்தார்.

**10.07**. இந்நீதிமன்றம் இதச பிரிவு 294(பி)–ல் குறிப்பிடப்பட்டுள்ள விளக்கத்தையும், மாண்புமிகு உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதி மன்றத்தின் பல வழக்குகளில் வழங்கியுள்ள வழிகாட்டுதல் மற்றும்

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:32:34 +0530

அறிவுறுத்தல்களின் படியும், மேற்படி இவ்வழக்கின் சாட்சியத்தை கருத்தில் கொள்ளும்போது அரசுத்தரப்பில் அரசு வழக்கு சாட்சிகள் கூறுவதுபோல் ஆபாச வார்த்தையை உச்சரித்தால் மட்டுமே 294(b) இதச பிரிவின் வரையறைகளை ஈர்த்ததாக பொருள்கொள்ள முடியாது. மாறாக எதிரி தரப்பு வழக்கறிஞர் தன் வாதத்தில் கூறுவதுபோல் 294(b) பிரிவை ஈர்க்க மேற்படி ஆபாச வார்த்தைகளை பொது இடத்திலோ அல்லது அதன் சுற்றுப்புறத்திலோ எதிரியால் பேசப்பட்டு அதனால் புகார்தாரருக்கோ அல்லது பிறருக்கோ அருவருப்போ அல்லது தொல்லையோ ஏற்பட்டது என்பதற்கு இவ்வழக்கில் சாட்சியங்கள் எதுவும் இல்லாத நிலையில் 294(பி) இதச பிரிவு 1 மற்றும் 2 எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**10.08**. **இரண்டாவதாக,** இந்த வழக்கில் அரசு தரப்பில் எதிரிகள் மீதான இதச பிரிவு 324–ன் கீழான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்பட குற்ற சம்பவத்தில் எதிரிகள் ஈடுபட்டார்கள் என்பதை நிரூபணம் செய்தல் வேண்டும். அவ்வாறு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என காணும்போது, இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1. தனது புகாரில் விக்னேஸ் தன்னை கல்லால் தாக்கினார் என்றும் அவரது அப்பா ரவி தேங்காய் உறிக்கும் பாறையால் தன்னை தாக்கினார் என்றும் அதனால் தனது இடது உள்ளங்கை மற்றும் இடது கையில் காயம் ஏற்பட்டது என்று கூறியுள்ளார். அ.சா.1 தனது நீதிமன்ற சாட்சியத்தில், "கடந்த 18.06.2024ம் தேதி மழை பெய்து கொண்டிருந்தபோது மாலை 5, 5.30 மணியளவில் எங்களுக்கு சொந்தமான வைக்கோல் போரை படுதாவினால் மூடச் சென்ற போது

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:32:43 +0530

விக்னேஷ்க்கும் எனக்கும் வாய்தகராறு ஏற்பட்டது. அப்போது விக்னேஷ் தேங்காய் உரிக்கும் பாறையால் என்னை தாக்கினார். அதை தடுத்தபோது எனது இடது கையில் கிழிந்த காயம் ஏற்பட்டது." என்று சாட்சியம்மளித்துள்ளார் மேற்படி அ.சா.1 போலீசாரிடம் கொடுத்த புகாரினையும் நீதிமன்றத்தில் அளித்துள்ள சாட்சியத்தையும் பரிசீலனை செய்கையில் புகாரில் இவ்வழக்கின் எதிரியான அ.சா.2 ரவி தேங்காய் உறிக்கும் பாறையால் அ.சா.1 ஐ தாக்கினார் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் அதனை முரன்படுத்தும் விதமாக அ.சா.1 நீதிமன்ற சாட்சியத்தில் இவ்வழக்கின் முதல் எதிரியான விக்னேஷ் தன்னை தேங்காய் உறிக்கும் பாறையால் தாக்கியதாக சாட்சியம் அளித்துள்ளார். எதிரி–2 சம்பவ இடத்தில் இருந்ததாக எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை மேலும் அ.சா.1 தனது முதல் விசாரணையில் தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல என்று அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அரசு தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையிலும் போலீசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டு அதை போலீசார் படித்து காட்டிய பின்பு தான் தான் கையொப்பம் செய்தேன் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**10.09.** மேலும் அ.சா.1 அரசு தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையில், "கடந்த 13.08.2024 ம் தேதி மாலை 06.30 மணியளவில் மழை பெய்தது என்றும் நான் எனது வைக்கோல் போரை தார்பாய் மூலம் மூடிக்கொண்டிருந்த போது ஆஜர் எதிரிகள் இருவரும் கொச்ச

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:32:50 +0530

வார்த்தையால் திட்டி 1 வது எதிரி விக்னேஷ் என்னை கல்லால் தக்கினார் என்றும், அதை நான் இடது உள்ளங்கையால் தடுத்தேன் என்றும் எதிரி ரவி தேங்காய் உறிக்கும் பாறையால் என்னை தாக்கினார் என்றும் அதை நான் தடுத்தபோது எனது இடது கையில் காயம் ஏற்பட்டது என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் எதிரி ரவி எனது அப்பா ரமேஷை கல்லால் தாக்கினார் என்றும் எதிரி விக்னேஷ் தேங்காய் உறிக்கும் பாறையால் என்னை தாக்கினார் என்று கூறியுள்ளேன்" என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.1ன் சாட்சியம் முற்றிலும் அரசு தரப்பு சாட்சியத்திற்கு முரன்பட்டு உள்ளது. அ.சா.2, அ.சா.3 மற்றும் அ.சா.4 தங்களது நீதிமன்ற சாட்சியத்தில் ஆஜர் 1 வது எதிரி விக்னேஷ் தான் அ.சா.1ஐ தேங்காய் உறிக்கும் பாறையால் தாக்கியதாக சாட்சியம் அளித்துள்ளனர். மேலும் அ.சா.2 சம்பவ இடத்தில் இருந்தார் என்று எவ்வித சாட்சியமும் அளிக்கப்படவில்லை.

**10.10.** மேலும், இவ்வழக்கில் நீதிமன்றத்தில் புலன்விசாரணை அதிகாரியால் எந்தவித ஆயுதமும் தாக்கல் செய்யப்படவில்லை என்பது வழக்காவணங்கள் மூலம் தெரியவருகிறது. குற்றவியல் விசாரணையில் வழக்கு சொத்தை கைப்பற்றுவது குற்றம் சாட்டப்பட்டவரை குற்றவாளி என்று அறிவிப்பதற்கு இன்றியமையாத நிபந்தனை அல்ல. இருந்தபோதிலும் மிக முக்கியமானது என்னவென்றால், அரசு தரப்பு சமர்ப்பித்த சாட்சியம் நம்பகமானதா மற்றும் குற்றம் சாட்டப்பட்டவரின் குற்றத்தை நிரூபிக்க போதுமானதா என்பதுதான். இவ்வழக்கில் புலன்விசாரணை அதிகாரியால் எந்தவித ஆயுதமும் இந்நீதிமன்றத்தில்

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:32:57 +0530

தாக்கல் செய்யப்படவில்லை என்பதாலும், அ.சா.1 புகாரில் உள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல என்று அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக சாட்சியம் அளித்துள்ளதாலும் மேலும், 2 வது எதிரிக்கு எதிராக எவ்வித சாட்சியமும் அரசு தரப்பில் அளிக்கப்படாததாலும் இவ்வழக்கில் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் அனைவரும் ஒரே குடும்பத்தினர் என்பதாலும் தனிநபர் சாட்சிகள் யாரும் இவ்வழக்கில் விசாரணை செய்யப்படவில்லை என்பதாலும் எதிரிகளுக்கு எதிரான சட்டப்பிரிவு 324 இதச-ன் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**10.11. மூன்றாவதாக,** இவ்வழக்கில் எதிரி குற்றமுறு மிரட்டல் செய்ததாக அரசுத்தரப்பில் குற்றச்சாட்டு பதியப்பட்டுள்ள நிலையில் இதச பிரிவு 506(2)-ன் கீழான வரையறையை இத்தீர்ப்பில் சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

506. **Punishment for criminal intimidation**, - Whoever commits the offence of criminal intimidation shall be punished with imprisonment of either description for a term which may extend to two years, or with fine, or with both.

எதிரியின் மீதான குற்றமுறு மிரட்டல் விடுத்தார் என்ற குற்றச்சாட்டிற்கான வரையறைக்கு இதச பிரிவு 503-ன் கீழான வரையறையை இந்நீதிமன்றம் இங்கே சுட்டிக்காட்டுகிறது.

503. Criminal intimidation – Whoever threatens another with any injury to his person, reputation or property, or to the person or reputation of any one in whom that person is interested, with intent to cause alarm to that person, or to cause that person

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:33:04 +0530

to do any act which he is not legally bound to do, or to omit to do any act which that person is legally entitled to do, as the means of avoiding the execution of such threat, commits criminal intimidation.

**10.12.** கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் வாதிடுகையில் இதச பிரிவு 503–ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள வரையறையை சுட்டிக்காட்டி அ.சா.1 முதல் அ.சா.3 வரையான சாட்சிகள் அவர்களது முதல் விசாரணையிலும், புகார் அ.த.சா.ஆ.1லும் 1ம் எதிரி 506(2)–ன் கீழான வரையறைகளை ஈர்க்கும் வண்ணமாக எதிரிக்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார் என்று வாதிட்டார்.

**10.13.** எதிர் தரப்பு வழக்கறிஞர் தன் வாதத்தின்போது எதிரிக்கு எதிராக பாதிக்கப்பட்டதாக சொல்லப்படும் அ.சா.1, அ.சா.2 ஆகியோர் தங்களது முதல் விசாரணையில் எதிரிகள் தங்களை குற்றமுறு எண்ணத்துடன் மிரட்டியதாக இதச பிரிவு 506(2)ன் ஈர்க்கும் வண்ணமாக எந்த ஒரு உட்கூறும் கூறி சாட்சியம் அளிக்கவில்லை என்றும், எதிரிக்கு எதிராக 506(2) ன் கீழ் அரசுத்தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என தன் வாதத்தை முன் வைத்தார்.

**10.14.** இந்நீதிமன்றம் இதச பிரிவு 503–ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள வரையறைகளை கவனமாக படிக்கும்போதும் அ.சா.1 மற்றும் அ.சா.2ன் சாட்சியத்தை கவனாக உற்று பார்க்கும்போதும் அவர்களது சாட்சியத்தில் எதிரி தங்களை குற்றமுறு அச்சுறுத்தல் செய்ததற்கான எந்த ஒரு உட்கூறுகளையும் தங்களது சாட்சியத்தில் சொல்லவில்லை. மேலும் தங்களுக்கு எதிரிகளின் செய்கையினால் உயிர்போகும் என்ற அச்சமோ

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:33:12 +0530

அல்லது பீதியோ அல்லது ஆபத்து வருமோ என பயந்ததாக எந்த ஒரு சாட்சியமோ முன்வைக்காத நிலையில் இந்நீதிமன்றம் எதிர் தரப்பு வழக்கறிஞர் வாதிட்டதுபோல் இதச பிரிவு 506(2)ன் கீழான குற்றச்சாட்டு எதிரிக்கு எதிராக அரசுத்தரப்பு வழக்கில் ஈர்க்கவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**11**. மேலே கண்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை ஆராய்ந்து பார்க்கும் பொழுது அ.சா.1 ஐ பார்த்து எதிரிகள் தகாத வார்த்தையால் திட்டி அவமானத்தை ஏற்படுத்தியதாக கூறியுள்ள குற்றச்சாட்டை அரசு தரப்பு நிரூபிக்கப்படவில்லை என்றும், மேலும் 1 மற்றும் 2 எதிரிகள் அ.சா.1 மற்றும் 2 ஐ தாக்கி சொற்ப காயத்தை ஏற்படுத்தியதாக கூறியுள்ள குற்றச்சாட்டு அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், மேலும் இதச பிரிவு 506(2)ன் கீழான குற்றச்சாட்டு எதிரிகளுக்கு எதிராக அரசுத்தரப்பு சந்தேகத்திற்கு இடம்மின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,**

1. 1 மற்றும் 2 எதிரிகளின் மீதான இதச பிரிவு 294(பி) கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்தும், 1 மற்றும் 2 எதிரியை இதச பிரிவு 294(பி) ன்கீழ் உள்ள குற்றச்சாட்டிற்கு, குவிமுச பிரிவு 248(1) ன் கீழ் விடுதலை செய்தும், மேலும், 1 மற்றும் 2 எதிரிகளின் மீதான இதச பிரிவு 324 ன் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்தும், 1 மற்றும் 2 எதிரியை இதச பிரிவு 506(ii)ன் கீழ் உள்ள குற்றச்சாட்டிற்கு, குற்றவாளி இல்லை என்று

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:33:18 +0530

தீர்மானித்தும் எதிரிகளை குவிமுச பிரிவு 248(1)–ன் கீழ் விடுதலை செய்தும், தீர்ப்பளிக்கப்படுக்கப்படுகிறது.

இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தாளருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ஆம் தேதி திங்கள்கிழமை இந்நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:33:26 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.

**இணைப்பு**

**சாட்சிகளின் விபரம்**

**அரசுதரப்பு சாட்சிகள்**

| தரவரிசை | பெயர் | வகை |
|---|---|---|
| அ.சா.1 | ராஜா(எ) ராஜ்கண்ணா | புகார்தாரர் மற்றும் காயம்பட்ட நபர் |
| அ.சா.2 | ரமேஷ் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | ஜமுனா | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.4 | அனுசியா | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.5 | சரவணன் | பார்வை மகசர் சாட்சி |
| அ.சா.6 | மனோபாலன் | பார்வை மகசர் சாட்சி |
| அ.சா.7 | அமுதாராணி | புலன் விசாரணை அதிகாரி |

**எதிரிகள் தரப்பு சாட்சி – இல்லை**

**நீதிமன்ற சாட்சி – இல்லை**

## சான்றாவணங்களின் விபரம்

**அரசுதரப்பு சான்றாவணங்கள்**

| வ.எண் | சான்றாவண எண். | விபரம் |
|---|---|---|
| 1. | அ.சா.ஆ. 1/அ.சா. 7 | புகார் வாக்குமூலம் |
| 2. | அ.த.சா.ஆ.2/அ.சா.7 | முதல் தகவல் அறிக்கை |
| 3. | அ.சா.ஆ. 2/அ.சா.7 | பார்வை மகசர் |
| 4. | அ.சா.ஆ. 3/அ.சா.7 | வரைபடம் |
| 5. | அ.சா.ஆ. 5/ அ.சா.7 | விபத்து பதிவேடு நகல் |

**1 முதல் 2 எதிரிகள் தரப்பு சான்றாவணம் –இல்லை**
**நீதிமன்ற சான்றாவணம் – இல்லை**
**சான்று பொருள் – இல்லை**

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:33:33 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.

**தீர்ப்புரையின் நகல் :**

1. மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், திருவாரூர் அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

**குறிப்பு**

1. இவ்வழக்கின் முடிவு சம்பந்தப்பட்ட காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
2. இவ்வழக்கின் எதிரிகள் நீதிமன்ற விசாரணையின் போது பிணையில் இருந்தனர்.
3. சாட்சிகள் 3 வாய்தாவிற்கு மேல் அழைக்கப்படவில்லை.